ஸ்ரீமதே ஶட2கோபாய நம: ஸ்ரீ: ஸ்ரீ மது4ரகவயே நம:

## நம்மாழ்வார் திருமஞ்ஜநக் கட்டியங்கள்

सत्त्वाश्रयं षटपदभावयुक्तं सुहंससेव्यं सुमनस्समेतम् ।
सुरेश्वराह्लादकरं विभुं त्वां वदन्ति सन्त: शठकोपमेरुम् ।।

ஸத்த்வாஶ்ரயம் ஷட்பத3ப4ாவயுக்தம் ஸுஹம்ஸஸேவ்யம் ஸுமநஸ்ஸமேதம்।
ஸுரேஶ்வராஹ்லாத3கரம் விபு4ம் த்வாம் வத3ந்தி ஸந்த: ஶட2கோபமேரும்॥

நாயன்தே – "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மது4ஸூத3ந:। ஸாத்த்விகஸ் ஸது விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த2 சிந்தக:॥ (ப4ார–ஶாந்தி 358–73) என்னும்படி உத்பத்தி காலத்திலே தன்னுடைய விஶேஷகடாக்ஷத்தாலே ஸம்ஸாரிசேதநரை நிரஸ்த ரஜஸ்தமஸ்கராயும், ப்ரவ்ருத்3த4 ஸத்த்வகு3ணராம்படியும் பண்ணவல்ல ஸர்வேஶ்வரனுடைய நிரந்தர கடாக்ஷ பாத்ரபூ4தராய், உபாயோபேயங்களிரண்டும் ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளும், அந்தத் திருவடிகளில் பண்ணும் கைங்கர்யமுமாகவே நிஷ்கர்ஷித்திருக்குமவராய், ஜிதேந்த்3ரியராலே ஸேவிக்கப் படுமவராய், ஸம்ஸாரிசேதநரை உஜ்ஜீவிப்பிக்கையிலே நோக்கமான திருவுள்ளத்தை யுடையவராய், உக்திவ்ருத்திகளாலே ஸர்வேஶ்வரனை உகப்பிக்கும் ஸ்வப4ாவராய், அபரிச்சே2த்3ய மஹிமரான தேவரை ஸத்துக்களானவர் ஸ்வப4ாவ ஸாம்யத்தாலே மஹாமேருவாக விண்ணப்பம் செய்யா நின்றார்கள். (அது) இங்ஙனேயிராநின்றது. எங்ஙனேயென்னில்;

(ஸத்த்வாஶ்ரயம்) அந்த மஹாமேருவானது பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணமான பூ4மிக்கு ஒரு ஆணி அடித்தாப்போலே நிற்கைக்கீடான ப3லத்திற்கு ஆஶ்ரயமாயிருக்கும். தேவர் ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதபடி ஸத்த்வகு3ணம் ஒன்றுக்குமே ஆஶ்ரயமாய் எழுந்தருளியிருப்பீர்.

(ஷட்பத3ப4ாவயுக்தம்) அந்த மஹாமேருவானது நாநாவித4 புஷ்ப ரஸாஸ்வாத3 மத்த ப்4ருங்க3ாவளியாலே சேஷ்டாயுக்தமாயிருக்கும். தேவர் ஆறுவித4மான ஶரணாக3தி விஷயமான திருவுள்ளத்தையுடையராய் எழுந்தருளியிருப்பீர்.

(ஸுஹம்ஸஸேவ்யம்) மஹாமேருவானது மாநஸாதி3ஸரோவர்த்திகளான அழகிய அன்னங்களாலே ஸேவிக்கப்படுவதாயிருக்கும். தேவர் நாத2-யாமுந-யதிவராதி3களான பரமஹம்ஸர்களாலே ஸேவ்யமாநராய் எழுந்தருளியிருப்பீர்.

(ஸுமநஸ்ஸமேதம்) அந்த மஹாமேருவானது உத்3யாநதடாக ஜலங்களிலேயிருக்கிற நாநாவித4 புஷ்பங்களோடே கூடியிருக்கும். தேவர் ஸர்வேஶ்வரன் கைவிட்ட ஸம்ஸாரிகளையும் திருக்துகையிலே தத்பரராகையாலே அழகிய திருவுள்ளத்தையுடையராய் எழுந்தருளியிருப்பீர்.

(ஸுரேஶ்வராஹ்லாத3கரம்) அந்த மஹாமேருவானது தே3வர்களுக்கு நிர்வாஹகராய் இருந்துள்ள ப்ரஹ்மாதி3களுக்கு ஸ்வவைலக்ஷண்யத்தாலே

ஆஹ்லாத$_3$கரமாயிருக்கும். தேவர், ''பக்கம்நோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணன்'' என்கிறபடியே நிரந்தரகடாக்ஷம் பண்ணிக்கொண்டிருக்கும்படி அயர்வறும் அமரர்கள் அதிபதிக்கும் ஆஹ்லாத$_3$கரராய் எழுந்தருளியிருப்பீர்.

(விபு$_4$ம்) அந்த மஹாமேருவானது பூ$_4$மிக்கு மேலே எண்பத்துநாலாயிரம் யோஜனை உயர்த்தியை உடையதாகையாலே பர்வதாந்தரங்களைக் காட்டிலும் பெரியதாயிருக்கும். தேவர், 'அடியார் நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும் நிலையிடமே'' என்னும்படி உப$_4$யவிபூ$_4$தியிலும் அடங்காத பெருமையையுடையராய் எழுந்தருளியிருப்பீர்.

ஆக இப்படிகளாலே தேவரீரை (வத$_3$ந்தி ஸந்த: ஶட$_2$கோப மேரும்) ஸ்ரீமது$_4$ரகவி ப்ரப்$_4$ருதி ஸாத்த்விக ஸஜ்ஜநங்கள் ஒரு மஹாமேருவாக விண்ணப்பம் செய்யா நின்றார்கள்.

## திருவத்யயநோத்ஸவம் – நாலாம் திருநாள் கட்டியம்

प्रजापति शिवादिषु प्रवण चेतसामागमैः परावर विभागदं परमशास्त्रमुक्त्वा पुरा ।
विभाति शठकोप! तत्प्रबलशास्त्रशङ्काहृदां भवान् स्नपन पूर्वकं शपथमद्यकर्तुं यथा ।।

ப்ரஜாபதிஶிவாதி$_3$ஷு ப்ரவணசேதஸாமாக$_3$மை:

பராவர விப$_4$ாக$_3$தம் பரமஶாஸ்த்ரமுக்த்வா புரா।

விப$_4$ாதி ஶட$_2$கோப! தத்ப்ரப$_3$லஶாஸ்த்ரஶங்காஹ்ருத$_3$ாம்

ப$_4$வாந் ஸ்நபநபூர்வகம் ஶபத$_2$மத்$_3$ய கர்த்தும் யத$_2$ா॥

''ஸதே$_3$வ ஸோம்யேத$_3$மக்$_3$ர ஆஸீத்'', ''ப்$_3$ரஹ்மவா இத$_3$மேகமேவாக்$_3$ர ஆஸீத்'', ''ஆத்மா வா இத$_3$மேகமேவாக்$_3$ர ஆஸீத்'', ''ஏகோ ஹ வை நாராயண ஆஸீத், ந ப்$_3$ரஹ்மா நேஶாந:'', ''தத்ர ப்$_3$ரஹ்மா சதுர்முகே$_2$ா ஜாயதே'', புத்$_3$புத$_4$ா ரக்ஷய ஶூலபாணி: புருஷோ ஜாயதே'', ''நாரயணாத் ப்$_3$ரஹ்மா ஜாயதே, நாராயணாத் ருத்$_3$ரோ ஜாயதே'', ''ப்$_3$ரஹ்மாதி$_3$ஷு ப்ரலீநேஷு நஷ்டே லோகே சராசரே ஏகஸ்திஷ்ட$_2$தி விஶ்வாத்மா ஸ து நாராயண: பர:'' என்றும், ''தஸ்மிந் ஜஞ்ஞே ஸ்வயம் ப்$_3$ரஹ்மா ப்$_3$ரஹ்மணஶ்சாபி ஸம்பூ$_4$தஶ் ஶிவ:'' என்னுமிப்படி ஜகத்காரணமுகே$_2$ந நாராயணனுடைய ஸர்வஸ்மாத்பரத்வத்தையும் ஶ்ருதிஸ்ம்ருதிபுரஸ்ஸரமாக ஸகலஶாஸ்த்ரங்களும், ஏககண்ட$_2$மாக நின்று கே$_4$ாஷிக்கச் செய்தேயும், ஸ்ரஷ்ட்ருத்வ ஸம்ஹாரகத்வமுகே$_2$ந ருத்$_3$ர ப்ரஜாபதிமுக$_2$ தே$_3$வதாந்தர-பரத்வத்தையும், அநாகலித மூலப்ரக்ருதி ஸம்ப$_3$ந்த$_4$ பங்கவாஸநாரூஷித மாநஸராகையாலே வைதி$_3$கபத$_2$ விமுகராய், ப$_3$ாஹ்யபத$_2$ாபி$_4$முக$_2$ராய் லோகாயதரென்று பெயரிட்டு, ஶாஸ்த்ராநிஷ்ட$_2$ராகையாலே அலோகாயநராயும், அர்ஹரென்று பெயரிட்டு அநாதி$_3$மாயையாலே ஸுப்தரான தங்களை புத்$_3$த$_4$ராக ப்ரதிபத்தி பண்ணியும், ப$_4$க$_3$வத்$_3$விமுகராய்க் கொண்டு து$_3$ர்க்க$_3$தராய் இருக்க, ஸுக$_3$தர் என்று பேரிட்டுக் கொண்டு ப$_4$க$_3$வத் கு$_3$ணகத$_2$நத்தாலே ஸௌபா$_4$ஷிகராயிருக்கமாட்டாதே வைப$_4$ாஷிகராயும்,

http://acharya.org

ப்3ரஹ்மஸூத்ராவேத3நத்தாலே அஸௌத்ராந்திகரென்ன வேண்டியிருக்க, ஸௌத்ராந்திகர் என்று பட்டம்கட்டி யோகாசாரனென்று பெயரிட்டு வைதி3கஸரணியில் அயோக3ாசாரராயும், மாத்4யமிகரென்னச் செய்தே, ஶூந்யபக்ஷ வாதி3களாயும், ந்யாயவாதி3கள் என்று பெயர்பெற்று ப்ரத்யக்ஷத்துக்கு அநுமாநம் சொல்லி அந்யாய வாதி3களாயும், ப்ரமாணப்ரமேய விஶேஷம் அறியாமையாலே அவைஶேஷிகராய் இருக்க, வைஶேஷிகர் என்று விருதுபிடித்தும், ஸுபர்ணுஶ்ரிதமான வாஸுதே3வ தருச்ச2ாயையைவிட்டு அபர்ணுஶ்ரிதமான ஸ்த2ாணுவின் கீழே ஒதுங்கி பாஶுபததீ3க்ஷிதராய் ஸம்ஸார வடத்திலே (க3ர்த்தத்திலே?) ஆஶுபதிதராயும், இப்படி இவர்கள் தாங்கள் ஸர்வஜ்ஞரென்னும்படி ''மாநம் ப்ரதீ3பமிவ'' என்கிறபடியே ஸகலார்த்த2ப்ரகாஶகமான ப்ரமாணத்தை அவலம்பி3த்துவைத்து, விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவாரைப்போலே அத4:பதிதராகையாலே ஸுத்3ருஷ்டிகளான வேத3ாந்திகளாலே குத்3ருஷ்டிகளென்று பேர் பெறுவாரும், இவை இத்தனைக்கும் தப்பி ''ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்3ரஹ்மணி ஸ்தி2தம்'' என்று நித்யஶேஷத்வ ப்ரதிபத்திக்கு யுக்தமான மநஸ்ஸையுடையனுய் வைத்து, அந்த ஶேஷத்வ ப்ரதிஸம்ப3ந்தி4யான ஶேஷித்வ ப்ரதிபத்தியிலே அதஸ்மிந் தத்பு3த்3தி4 பண்ணி ''ஹிரண்யக3ர்ப்ப4ஸ்ஸமவர்த்ததாக்3ரே'' ''பூ4தஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத், த4ாதா யத2ா பூர்வமகல்பயத்'', ''ப்ரஜாபதி: ப்ரஜாSஸ்ருஜத்'' என்றும், ''ந ஸந்நசாஸச்சி2வ ஏவ கேவல:'', 'ஶம்பு4ராகாஶமத்4யே த்4யேய:'',''ஏக ஏவ ருத்3ர:'' என்றும் சொல்லுகிறபடியே ஹிரண்யக3ர்ப்ப4–த4ாத்ரு–ப்ரஜாபதி ஶப்3த3ங்களாலும், ஶிவ–ஶம்பு4–ருத்3ர ஶப்3த3ங்களாலேயும் ப்ரதிபாதி3தமான ஸாம்யத்தாலே ஸம்ப்ரதிபந்ந க்ஷேத்ரஜ்ஞரான ப்3ரஹ்மருத்3ரர்களளவிலே ஶேஷித்வ பு3த்3தி4 பண்ணியும், அநர்த்தப்படுகிற சேதநர்க்கு ''நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத் தெய்வம் நாடுதிரே'' ''நாடிநீர்வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான் வீடில்சீர்ப்புகழ் ஆதிப்பிரான்'', ''பரன்திறமன்றிப் பல்லுலகீர்! தெய்வம் மற்றில்லை'', ''பேசநின்ற சிவனுக்கும் பிரமன்தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே கபாலநன் மோக்கத்துக் கண்டு கொண்மின்... ஈசன்பாலோர் அவம்பறைதல் என்னுவது'', ''நுந்தெய்வமும் ஆகி நின்றுன்... பொலிந்து நின்றபிரான் கண்டீர்'', ''உம்மை இன்னே தேற்றி வைத்தது எல்லீரும் வீடுபெற்றுல் உலகில்லை என்றே'', ''ஆடுபுட்கொடி ஆதிமூர்த்திக்கு அடிமை புகுவது'' ''மிக்க ஆதிப்பிரான் நிற்க மற்றைத் தெய்வம் விளம்புதிரே'', ''உம்மை உய்யக்கொண்டு போகுறில் திருக்குருகூரதனை உளங்கொள் ஞானத்து வைம்மின்'', ''குறியமாணுருவாகிய நீள்குடக்கூத்தனுக்காட்செய்வதே உறுவதாவது'' என்று இப்படி பத்தும்பத்தாக பராவரவிப4ாக3பே4ாத4ந பரமஶாஸ்த்ரமான திருவாய்மொழியை முன்பே அருளிச்செய்தருளின தேவரீர், இப்போது திருவத்4யயநோத்ஸவ வ்யாஜத்தாலே புறப்பட்டு உலாவியருளி, மீண்டெழுந்தருளித் திருமஞ்ஜநம் செய்தருள்வதாக மஞ்ஜநவேதி3கா மத்4யத்திலே ஜ்ஞாநமுத்3ரா ஸஹிதராய் இருக்கிறவிருப்பு இங்ஙனேயிராநின்றது, எங்ஙனேயென்னில்;

உக்த நிர்தே$_3$ாஷ ஶாஸ்த்ரஸித்$_3$த$_4$மான அர்த்த$_2$தாத்பர்ய ஸம்ஶயமநாக்கஊ லப்$_3$த$_4$ விஸ்வாஸயுக்தராம்படி ஸசேலஸ்நாந பூர்வகமாக ஶபத$_2$கர்மத்திலுலே தீ$_3$க்ஷித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கிருப்போலே இராநின்றது.

## முதல்திருநாள் கட்டியம்

க$_3$ாதும் பூர்ணஸ்தி$_2$தேந்து$_3$ம் மது$_4$ரகவிமுகை$_2$: ப்$_4$ருத்யவர்க்கை$_3$ஶ்ச ஸார்த்$_3$த$_4$ம்
ஸ்நாதும் வேத்$_3$யாம் நிஷண்ணஸ்தத$_3$நுகு$_3$ணமால்யாத்$_3$யம்ப$_3$ரஸ்த்வம் ஶட$_2$ாரே!।
த$_3$ாதும் முக்திம் ஸ்வகாந்த்யேச்ச$_2$ஸி கிமிஹ ந்ருணும் ஶாஸ்த்ரமார்க்க$_3$ாதிக$_3$ாநாம்
ஸ்வாதந்த்ர்யாதே$_3$வ க்ருஷ்ண: ப்ரத$_2$மமிஹ யத$_2$ா சிந்தயந்த்யா: ஸ்வரூபம்॥

நாயிந்தே– ''அந்த$_4$ம் தமஸ்திமிரநிர்மிதமேவ யத்ஸ்யாத்। தத் ஸாரஸாதித ஸ்வத$_3$ந்தயதி வ்ருத்தவார்த்தம்॥'' என்கிறபடியே திமிரஸார நிர்மிதமென்னும்படி இருண்டு சுருண்ட திருக்குழல்கற்றையும், அஷ்டமீ சந்த்$_3$ரநிப$_4$மான திருநெற்றியும், அந்த சந்த்$_3$ரமத்$_4$யத்திலே ஒரு அம்ருதத$_4$ாரை என்னலாம்படி திருநெற்றியிலே அழகுபெறச்சாத்தின திருநாமமும், மன்னியசீர்மத$_3$னன் கருப்புச் சிலையையும் தன்னழகாலே வெல்லும் திருப்புருவமும், அநவதி$_4$க த$_3$யாநுராக$_3$ வாத்ஸல்ய ஸூசகங்களாய் அப்பொழுதைத்தாமரைப்பூப்போலே இருக்கிற திருக்கண்களும், கல்பலதா கல்பமான திருமூக்கும், பி$_3$ம்ப$_3$வித்$_3$ரும த$_3$ம்ப$_4$ஹாரியான திருவத$_4$ரமும், ஶுத்$_3$த$_4$நிஸ்தலாலி போலேயிருக்கிற திருமுத்து நிறையும், கர்ணிகா விலஸிதமான கர்ணபாஶமும், த்$_3$ருஷ்டிசித்தாபஹாரிகளான சுபு$_3$ககபோலங்களும், க்ரமுக தருண க்$_3$ரீவாகம்பு$_3$ ப்ரதிமமான திருக்கழுத்தும், கனக கி$_3$ரியைக் கடைந்தெடுத்தாப் போலேயாய், ப்ரணதரக்ஷண தீ$_3$க்ஷிதமான திருத்தோள்களும், ஜ்ஞாநப்ரத$_3$ன் என்னுமிடத்தைக் கோள்சொல்லுகிற ஜ்ஞாநமுத்$_3$ரா ஸஹிதமான கரகாந்தியும், அகிலஜநமநோஹரமாய் அநேகபூ$_4$ஷணபூ$_4$ஷிதமாய் வகுளத$_3$ாம விராஜிதமான வக்ஷஸ்ஸ்த$_2$லமும், அக்ஷயபாபஹாரியான குக்ஷிப்ரதே$_3$ஶமும், ஸௌந்த$_3$ர்யாம்ருத நீரபூர பரிவாஹாவர்த்தக$_3$ர்த்தாயிதமான திருநாபி$_4$யும், திருவரை பூத்தாப்போலே யிருக்கிற தி$_3$வ்யாம்ப$_3$ரஶோபை$_4$யும், ரம்ப$_4$ாஸ்தம்ப$_4$ ஸஹோத$_3$ரமான திருத்தொடைகளும், ககுத்$_3$மத்ககுத்$_3$நிப$_4$மான திருமுழந்தாள்களும், பங்கஜநாளதுல்யைகளான ஜங்கை$_4$களும், ''யத்$_3$வா ஶரண்யம் அஶரண்யஜநஸ்ய'' என்கிறபடியே அஶரண்யஶரண்யமுமாய், தத்க்ஷணோந்மீலித ஸரஸிஜ ஜைத்ரமான சரணயுக$_3$ளமுமாய், ஆக இப்படி ஸர்வாவயவ ஸுந்த$_3$ரமான தி$_3$வ்ய விக்$_3$ரஹத்தை தேவர் இப்போது

திருவத்$_4$யயநோத்ஸவ தீ$_3$க்ஷிதராய், ஸ்வஶிஷ்யதரரான மது$_4$ரகவி ப்ரப்$_4$ருதி ஸஜ்ஜநங்களோடு, பொலிந்துநின்றபிரானைப் பாடியருள்வதாக ஸங்கல்பித்து, அலங்க்ருதக$_3$ாத்ரராய்ச் சென்று ஸேவிக்க வேண்டுகையாலே தத$_3$ங்க$_3$மாக திருமஞ்ஜனம் செய்யவேணுமென்று, மஞ்ஜநவேதிக$_3$ாமத்$_4$யத்திலே ஜ்ஞாநமுத்$_3$ரா ஸஹிதராய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிறயிருப்பு இங்ஙனேயிராநின்றது. எங்ஙனேயென்னில்,

''சிந்தயந்தீ ஜக$_3$த்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம்।
நிருச்ச்$_2$வாஸதயா முக்திம் க$_3$தாந்யா கே$_3$ாபகந்யகா'' (வி.பு.5–13)

என்கிறபடியே, அஜ்ஞாத ப$_4$க$_3$வத்$_3$விஷயையான சிந்தயந்திக்கு ஸ்வவிக்$_3$ரஹஸ்மரண ஹேதுவாகத் தன்னுடைய நிரங்குஶஸ்வாதந்த்ர்யத்தாலே முக்தியைக் கொடுத்த க்ருஷ்ணனைப் போலே இஹலோகத்தில் விஷயப்ரவணராய், ரூபாப$_4$ாஸம் கண்டு விஷயங்களிலே மேல்விழுந்து திரிகிற ஸம்ஸாரிசேதநருக்கு தேவர் வடிவழகாலே விஷயாந்தர வைமுக்$_2$யபூர்விகையாக, ஸ்வவிஷயருசியை விளைத்து, ''நம்பினேன் மடவாரையும் முன்னெலாம் செம்பொன்மாடத்திருக்குருகூர் நம்பிக்கன்பனாய் அடியேன் சதிர்த்தேனின்றே'' என்று வாய்புலம்பும்படிப்பண்ணி ''மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே தேவு மற்றறியேன்'' என்று அவிதி$_3$தாந்யதை$_3$வதமாய்க் கொண்டு தேவர்திருவடிகளைப் பற்றிநின்று அடிமைசெய்கையாகிற கைங்கர்யாநந்த$_3$த்தையும் கொடுத்தருள்வதாகத் திருவுள்ளம் பற்றி தத$_3$ர்த்த$_2$மாகத் திருமஞ்ஜநம் செய்ய எழுந்தருளியிருக்கிருப்போலே யிராநின்றது.

## ஆழ்வார் இரண்டாம்திருநாள்

प्रदक्षिणनमस्क्रियाप्रभृतिभिर्वनाद्रेः पुरा
भज त्वमिति चोदितं भगवतो गुणोपासनम् ।
यदध्ययनलक्ष्यतः प्रकटयन् स्ववृत्त्यादिना
समस्तजनगोचरं शठरिपोऽद्य संस्नासि भोः ।।

ப்ரத$_3$க்ஷிணநமஸ்க்ரியாப்ரப்$_4$ருதிபி$_4$ர் வநாத்$_3$ரே: புரா
ப$_4$ஜ த்வமிதி சோதி$_3$தம் ப$_4$க$_3$வதோ கு$_3$ணோபாஸநம்।
யத$_3$த்$_4$யயநலக்ஷ்யத: ப்ரகடயந் ஸ்வவ்ருத்த்யாதி$_3$நா
ஸமஸ்தஜநகோ$_3$சரம் சட$_2$ரிபோऽத்$_3$ய ஸம்ஸ்நாஸி போ$_4$:॥

நாயந்தே! ''தத்ர ப்$_3$ரஹ்மா சதுர்முகோ$_2$ऽஜாயத।'', ''நாராயணாத்$_3$ ப்$_3$ரஹ்மா ஜாயதே। நாராயணாத்$_3$ ருத்$_3$ரோ ஜாயதே।'', ''ப்ரஜ்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ'' என்கிறபடியே இருவரவர் முதலான அரவணைமேல் திருமாலாலே மயர்வறமதிநலம் அருளப்பெற்றுடையராய், ''ப$_3$ால்யாத் ப்ரப்$_4$ருதி ஸுஸ்நிக்$_3$தோ லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்த்தந:'' என்றும், ''அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து'' என்றும் சொல்லுகிறபடியே பேதைப்பருவத்திலே மூதுவராம் விண்ணாட்டவருடைய நித்ய வ்ருத்தியிலே அத்யபி$_4$நிவிஷ்டராய் ''ந ச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராக$_4$வ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யா விவோத்$_3$த்$_4$ருதௌ॥'' என்றும், ''நின்னலாலிலேன்காண்'' என்றும் சொல்லுகிறபடியே மாமலராள்கோனை விடில் நீரில் குதித்தெழுந்த மீன் எனவே ஆக்கைமுடியும்படியான த$_3$ஶையையுடையராய், ''ந தே$_3$வலோகாக்ரமணம் நாமரத்வமஹம்வ்ருணே। ஐஸ்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா।'' என்கிறபடியே கைம்மா துன்பம் கடிந்த அம்மானுடைய செம்மா பாதபற்புத் தலைசேருகையில் த்வரையாலே ''எம்மாவீட்டுத் திறமும் செப்பம்'' என்றும் த்ருணீக்ருதாநுத்தம பு$_4$க்திமுக்திகராய் பெருநிலம் கடந்த நல்லடிப்போது அலற்றுவன் தழுவுவன் வணங்குவன் என்று திருவுலகளந்த திருவடிகளில் த்ரிவித$_4$ கரணங்களாலும் உண்டான விவித$_4$ கைங்கர்யங்களே ஸர்வவித$_4$ புருஷார்த்த$_2$மென்று அறுதியிட்டருளி 'தனக்கேயாக எனக்கொள்ளுமீதே' என்று அந்த புருஷார்த்த$_2$த்தை நிஷ்ப்ரயோஜநமாக்குமதான ஸ்வப்ரயோஜநத்தைக் கழித்து ஸப்ரயோஜநமாக்கியருளின தேவரீர் இப்போது திருவத்$_4$யயநம் என்றொரு வ்யாஜத்தாலே கிண்ணகத்திற்குப் படலிட்டாப்போலே கிரீடாதி$_3$ நூபுராந்தமான மெய்யமர் பல்கலன்களையும் நன்கணிந்து த்$_3$வஜ, ச$_2$த்ர, சாமர, பே$_4$ரீ, கீ$_3$தா, காஹள ஶங்காஶீஸ்ஸ்துதி கோலாஹலத்துடனே புறப்பட்டருளி, தணியாவெந்நோய் உலகில் தவிர்த்து ஆளுமாளார் என்கிறவனுடைய தனிமையைத் தீர்க்கைக்கு ஆள்பார்த்துழி

தந்து, மீண்டெழுந்தருளி திருமேனி இன்னவண்ணமென்று காட்டீர் என்றிருப்பார்க்குக் காட்சி கொடுக்கைக்காக ''ஸர்வபூ$_4$ஷணபூ$_4$ஷார்ஹ:'' (ரா.கி.) என்கிறபடியே ஆப$_4$ரணஸ்யாப$_4$ரணமான திருமேனியில் அழகு வெள்ளத்தை முழுமதகாகத்திறந்து செழுமாமணிகள் சேரும் திருமாமணி மண்டபமான இத்திருவோலக்கத்திலே ஒரு நாயகரத்நம் அங்குரித்தாப்போலே மஞ்ஜநவேதி$_3$கா மத்$_4$யத்திலே ஜ்ஞாநமுத்$_3$ரா ஸஹிதமாய்க் கொண்டு எழுந்தருளியிருக்கிற இருப்பு இங்ஙனே யிரா நின்றது. அதெங்ஙனேயென்னில் – ''தஸ்மிந் யத$_3$ந்தஸ் தது$_3$பாஸிதவ்யம் தஸ்மிந் யத$_3$ந்தஸ் தத$_3$ந்வேஷ்டவ்யம்'' என்று ஶாஸ்த்ரங்களிலே சொல்லுகிறபடியே ''பலமுந்து சீரில் படிமின்'' என்று விதி$_4$த்த ப$_4$க$_3$வத்$_3$ கு$_3$ணோபாஸநத்தை ஸாங்க$_3$மாக்க வேண்டுகையாலே ''மாலிருஞ்சோலை தளர்விலராகில் சார்வது சதிரே'' ''மாலிருஞ்சோலைப் பதியது வேத்தி எழுவது பயனே'' ''மாலிருஞ்சோலை தொழக்கருதுவதே துணிவது சூதே'' ''மாலிருஞ்சோலை வலம் செய்து நாளும் மருவுதல் வழக்கே'', ''மாலிருஞ்சோலை நெறிபடவதுவே நினைவது நலமே'' இத்யாதி$_3$களாலே க்ஷேத்ரவாஸ, ஸங்கீர்த்தந, அஞ்ஜலி, ப்ரத$_3$க்ஷிண க$_3$தி சிந்தநாத்$_3$யங்க$_3$ங்களை மலையிலக்கா முன்பு விதி$_4$த்த படியை அக்காலத்தில் அநுஷ்டி$_2$க்கப் பெருத கர்ப்ப$_4$நிர்ப்ப$_4$ாக்$_3$யரான அடியோங்களும் இழவாதபடியாக அன்பன் தன்னை அடைந்தவர்க்கெல்லாம் அன்பனுன தேவருடைய இவ்வுலகினில் மிக்க அருளாலே ''மாடமாளிகை சூழ்ந்தழகாய திருக்குருகூரதனைப் பாடியாடிப் பரவிச்சென்மின்கள்'' என்கிறபடியே உறியமர்வெண்ணெய் உண்டவன் நீள்குடக் கூத்தனுய் மேவிஉறைகோவில் விஷயமான தேவருடைய வந்த$_3$ந, கீர்த்தந அர்ச்சநாதி$_3$ ப்ரகாரங்களாலே வெளியிட்டருள்வதாகத் திருவுள்ளம்பற்றி தத$_3$ர்த்த$_2$மாகத் திருமஞ்சனம் செய்ய எழுந்தருளியிருக்கிற இருப்பென்று விண்ணப்பம் செய்யலாயிரா நின்றது.

**ஆழ்வார் மூன்றாம் திருநாள்**

अविच्छिन्नं कालं सकलमविभागेन सुदृढं
समस्तं कैङ्कर्यं शठमथन कुर्यामहमिति ।
यतप्यात्य प्रोक्तं शुभतररुचे सर्व सुहृते
पुनस्स्पष्टीकुर्वन्निह सदसि संस्नासि तदये ।।

அவிச்சி$_2$ந்நம் காலம் ஸகலமவிப$_4$ாகே$_3$ந ஸுத்$_3$ருடம்
ஸமஸ்தம் கைங்கர்யம் சட$_2$மத$_2$ந குர்யாமஹமிதி।
யதப்யாத்ய ப்ரோக்தம் ஶுப$_4$தரருசே ஸர்வஸுஹ்ருதே$_3$
புநஸ்ஸ்பஷ்டீகுர்வந்நிஹ ஸத$_3$ஸி ஸம்ஸ்நாஸி தத$_3$யே॥

நாயன்தே! ''ஸர்வம் க2ல்வித3ம் ப்3ரஹ்ம'' ''விஶ்வமேவேத3கும் புருஷ:'' என்று சொல்லுகிறபடியே ஸர்வஶப்3த3வாச்யத்வத்தை ''முழுதுமாய் முழுதியன்ருய்'' என்று அருளிச்செய்தும், அது தான் க்3ராமேSயம் புருஷ: என்னுமாப்போலே அமுக்2யம் ஆகாதபடி ''அந்தர்ப3ஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தி2த:'', ''அணோரணீயாந் மஹதோ மஹீயாந்'' இத்யாதி3களாலே அவனுக்குச் சொல்லுகிற பரிஸமாப்தி வ்யாப்தியை, ''எங்ஙனும் நிறைந்தவெந்தாய்'' ''எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவர நிறைந்து நின்ற'' என்று அருளிச்செய்தும், அது தான் ஆகாஶவ்யாப்திபோலே ஆகாதபடி ''அந்த:ப்ரவிஷ்ட ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா'' என்று அவனுக்குச் சொல்லப்படுகிற நியந்த்ருத்வேந வ்யாப்தியை ''ஐந்துபூதமாய் இரண்டு சுடராய் அருவாகி'' என்று அருளிச்செய்தும், அதுதான் ஜீவாத்மாவுக்குப்போலே ஹேயஸ்பர்ஶஸஹமாகாதபடி ''அநஶ்நந்நந்யோ அபி4சாகஶீதி'' என்று அவனுக்குச் சொல்லப்படுகிற தத்3க3த தே3ாஷஸ்பர்ஶராஹித்யத்தை ''அவரவர் சமயந்தோறும் தோய்விலன்'' என்று அருளிச்செய்தும், ஆக இப்படி ஸர்வாந்தர்யாமிதயா, ஸர்வஶப்3த3வாச்யனுன ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஹேயப்ரத்யநீகமான ரூபத்தை அருளிச்செய்து, ''ஹிரண்மஶ்மஶ்ரு: ஹிரண்யகேஶ: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:'', ''தஸ்ய யத2ா கப்யாஸம் புண்ட3ரீகமேவமக்ஷிணீ'' என்று ஆணிப்பொன்னுருவான தி3வ்யாத்மஸ்வரூபத்திற்கு மாணிக்கச்செப்புப்போலே ப்ரகாஶகமாய், அநுக்3ரஹைக பாத்ரமான அவர்களுடைய விரோதி4யை நிக்3ரஹிக்கைக்காக பரிக்3ரஹித்த விக்3ரஹத்தை, 'முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ' என்று தொடங்கி, ''சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனி ஒளி ஒவ்வாது'' என்றும், ''அப்பொழுதைத் தாமரைப்பூ கண்'' என்றும் அருளிச்செய்தும் ''ஸ ஏகத4ா ப4வதி த்3வித4ா ப4வதி த்ரித4ா ப4வதி ஶதத4ா ப4வதி அபரிமிதத4ா ப4வதி, இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந் ஸ தத்ர பர்யேதி'' என்று சொல்லப்படுகிற விக்3ரஹாநுப4வஜநித ப்ரீதிகாரிதகைங்கர்யத்தில் அபி4நிவேஶாதிசயத்தை ''தெழிகுரலருவித் திருவேங்கடத்து எழில் கொள் சோதி எந்தைதந்தைதந்தைக்கே ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்'' என்று ப்ரார்த்தி2த்தருளி, இப்படி ப்ரார்த்தி2த்தது ஸார்த்த2மாம்படி எங்கும் தானாய் நின்ற தன் ஸர்வாத்மப4ாவத்தை ஸர்வேஶ்வரன் ஸாக்ஷாத்கரிப்பிக்கையாலே பெரும் காற்றில் விழுபழம் எடுப்பாரைப்போலே ''புகழுநல்லொருவனென்கோ' என்று தொடங்கி ''இகழ்வில் இவ்வனைத்துமென்கோ'' என்றும், ''கூவுமாறறியமாட்டேன் யாவையும், யவரும் தானே'' என்று துரும்பைக் கூடாகக்கண்டு யாசிதையான வாசிகவ்ருத்தியைச் செய்தருளி, அதுதான் அவனளவிலே தவறிப்போகாதபடி ''நங்கள் வானவரீசன் நிற்க... இழியக்கருதியோர் மானிடம் பாடல் என்னாவது'', ''தன்னாகவே கொண்டு சன்மம் செய்யாமையும் கொள்ளும்'' ''வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் என் வள்ளல் மணிவண்ணன்

தன்னைக் கவிசொல்ல வம்மின்'' என்று நிஷ்க்ருஷ்டையான ஸ்வவ்ருத்தியிலே மூட்டியருளி, ''ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ'' என்னும் மீளவும் தேவரீருடைய அநுஷ்ட$_2$ாநத்திலே ப்ரகாஶிப்பித்தருள்வதாகத் திருவுள்ளம்பற்றித் தத$_3$ர்த்த$_2$மாக திருமஞ்ஜநம் செய்ய எழுந்தருளியிருக்கிற இருப்பென்று விண்ணப்பம் செய்யலாயிராநின்றது.

**ஐந்தாம் திருநாள்**

श्रीमन्! श्रीशठकोप! संप्रति भवान् पूर्णप्रभावोत्तरां
गीतिं गातुमुपक्रमन् सुविहितस्नानक्रियो राजते ।
सत्यं मां न जहाति स क्षणमपि स्नेहात् कुरुङ्गाधिपः
चित्ते मे वसतीति वाचमुदितान् उद्धर्तुमिच्छन्निव ।।

ஸ்ரீமந்! ஸ்ரீசடகோப! ஸம்ப்ரதி ப$_4$வாந் பூர்ணப்ரப$_4$ாவோத்தராம்
கீ$_3$திம் க$_3$ாதும் உபக்ரமந் ஸுவிஹிதஸ்நாநக்ரியோ ராஜதே।
ஸத்யம் மாம் ந ஜஹாதி ஸ க்ஷணமபி ஸ்நேஹாத் குருங்காதி$_4$ப:
சித்தே மே வ ஸதீதி வாசமுதி$_3$தாந் உத்$_3$த$_4$ர்த்தும் இச்ச$_2$ந்நிவ॥

நாயன்தே – த்ரைவித்$_3$யவ்ருத்$_3$த$_4$ஜநஶிரோபூ$_4$ஷணமாய், ஸாத்த்விகஜந ஸநாதநஸம்பத்தாய், ஆஶ்ரிதஸர்வவித$_4$ப$_3$ந்து$_4$பூ$_4$தமாய், அஶரண்யஶரண்யமாயிருக்கையாலே, 'மேவினேன் அவன் பொன்னடி' என்கிறபடியே ஶரணவரணார்ஹமான சரணயுக$_3$ளமும், பங்கஜநாளதுல்யைகளான ஜங்கை$_4$களும், ஞாநத்$_3$வந்த்$_3$வ க$_3$திநிவர்த்தகமான ஜாநுத்$_3$வந்த்$_3$வமும், சாருக்களான ஊருக்களும், ப$_3$த்$_3$த$_4$சேலமான மத்$_4$ய ஸௌந்த$_3$ர்யமும், அக்ஷிப்ரியாவஹமான குக்ஷிப்ரதே$_3$ஶமும், ஆவர்த்தரூபமான திருநாபி$_4$யும், அதிவிஶாலபீநமாய் அநேகபூ$_4$ஷணபூ$_4$ஷிதமாய் வகுளத$_4$ாம விராஜிதமான வக்ஷஸ்த$_2$லமும், ப$_4$ஜதாமப$_4$யத$_3$மான பு$_4$ஜகாந்தியும், க்ரமுகதருண க்$_3$ரீவை போலே ப$_3$ந்து$_4$ரையான கந்த$_4$ரையும், ஸுவர்ணகுண்ட$_3$ல மண்டி$_3$தமான கர்ணபாஶமும், த்$_3$ருஷ்டிசித்தாபஹாரிகளான சிபு$_3$ககபோலங்களும், அருணராக$_3$ விமோசகமான அத$_4$ரராக$_3$மும், கந்த$_3$ர்ப்பமத$_3$ஹரமான மந்த$_3$ஸ்மிதமும், ப$_4$ாஸாமநோஹரமான நாஸாவலியும், க்ருஷ்ணராக$_3$ஸஹிதமாய் ஶ்ருத்யவலம்பி$_3$களான திருக்கண்களும், லோலாயதமான ப்$_4$ரூலதாயுக$_3$மும், அர்த்$_3$த$_4$ சந்த்$_3$ரத$_3$ளாயதமான அளீகதே$_3$ஶமும், அதில் அம்ருதச்யுதி என்னலான திருநாமமும், திமிரகே$_3$ாஶமான கேஶபாஶமும், ஆக இப்படி பாத$_3$ாதி$_3$கேஶாந்தமான அவயவ ஶோபை$_4$யாலும், பரமார்த்த$_2$ பே$_4$ாத$_4$கையான ஜ்ஞாநமுத்$_3$ரையாலும், ஸ்ரீமாந் என்றும், ஸ்ரீசட$_2$கே$_3$ாபன் என்றும் சொல்லப்படுகிற தேவர், இப்போது நம்பியினுடைய திருவாய்மொழியைப் பாடியருள்வதாகக் கோலி ஸக்ரமமாகத் திருமஞ்ஜநம் செய்யவேணுமென்று மஞ்ஜந வேதி$_3$கா மத்$_4$யத்திலே ஜ்ஞாநமுத்$_3$ரா ஸஹிதராய்க்

கொண்டு எழுந்தருளியிருக்கிற இருப்பு இங்ஙனே இராநின்றது; எங்ஙனேயென்னில்;– 'அல்லுநன்பகலும் இடைவீடின்றி நல்கி என்னை விடான் நம்பி நம்பியே' என்று குருங்க$_3$ க்ஷேத்ர வாஸியான பூர்ணுபி$_4$த$_3$ாநன் என்னுடைய ஹ்ருத$_3$யத்திலே ஸஸ்நேஹமாக நித்யவாஸம் பண்ணி, என்னை ஒருக்காலமும் விட்டகலகில்லே னென்று தேவரீர் முன்பு அருளிச்செய்தருளின வசநத்தில், அவிஸ்ரம்ப$_4$ பு$_3$த்$_3$தி$_4$களுக்கு ''நிறைந்தென்னுள்ளே நின்றொழிந்தான், நீலமேனியும் நான்குதோளும் என்நெஞ்சம் நிறைந்தனவே'', ''குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச்சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு என்னெஞ்சுள்ளெழும்'' என்று சொல்லி ஶபத$_2$ம் பண்ணிக்கொடுக்க எழுந்தருளியிருக்கிருப்போலே இராநின்றது.

## ஆரும் திருநாள்

पुरा लोकं भुक्त्वा पुनरभिनिविष्टं बहुगुणम् पराभाव्याप्ताङ्गं विपुलमखिलात्मानममलम् ।
कृतावासं देवं धरणितिलके वेङ्कटगिरौ शठारेऽद्य स्नानं शरणमुपगन्तुं वितनुषे ।।

புரா லோகம் பு$_4$க்த்வா புநரபி$_4$நிவிஷ்டம் ப$_3$ஹுகு$_3$ணம்
பராப$_4$ாவ்யாப்தாங்க$_3$ம் விபுலமகி$_2$லாத்மாநமமலம்।
க்ருதாவாஸம் தே$_3$வம் த$_4$ரணிதிலகே வேங்கடகி$_3$ரௌ
சட$_2$ாரேऽத்$_3$ய ஸ்நாநம் ஶரணமுபக$_3$ந்தும் விதநுஷே॥

நாயிந்தே – ''அஸ்யேஶாநா ஜக$_3$தோ விஷ்ணுபத்நீ'' என்றும், ''நித்யைவைஷா ஜக$_3$ந்மாதா விஷ்ணோஃஶ்ரீரநபாயிநீ'' என்றும் சொல்லுகிறபடியே ஸகலஜக$_3$த்ஸ்வாமிநியாய், 'உனக்கேற்கும்' என்னும்படி தனக்கு ஹ்ருத$_3$யகாமிநியாய், 'மலர்மகள்' என்றும், 'மலர்ப்பாவை' என்றும், 'தாமரை மங்கை' என்றும், 'பூவின் மிசை நங்கை' என்றும் சொல்லுகிறபடியே பங்கயத்தில் பரிமளத்தை பருக்கையற வடித்து, பாவையாக வகுத்த மங்கைப் பருவத்தில் நங்கையாய், வாசம் செய்பூங்குழலாள் என்கிறபடியே ஸர்வகந்த: என்கிற வாசத்தடத்துக்கும் வாசத்தைச் செய்யுமதான கேஶத்தையுடையளாய், ''விதி$_4$தஸ் ஸ ஹி த$_4$ர்மஜ்ஞ: ஶரணாக$_3$தவத்ஸல:। மித்ரமௌபயிகம் கர்த்தும் ராமஸ்ஸ்த$_2$ாநம் பரீப்ஸதா'' இத்யாதி$_3$ப்படியே அவிஹிதசாரியாகையாலே அஹிதஞனவன் விஷயத்திலும் அத்யந்த ஹிதப$_4$ாஷிணியாய், ''ப்ரியம் ஜநமபஶ்யந்தீம் பஶ்யந்தீம் ராக்ஷஸீக$_3$ணம்। ஸ்வக$_3$ணேந ம்ருகீ$_3$ம் ஹீநாம் ஶ்வக$_3$ணைராவ்ருதாமிவ'' என்கிறபடியே ஏகாக்ஷீ, ஏககர்ணீ முதலான து$_3$ர்ஜநங்களுடைய தர்ஜநங்களாலே பத்துக்கோடி செந்நாய்களாலே சுற்றப்பட்ட மான் பெடைபோலே, தான்பட்டதொன்றையும் பாராதே ''ப$_4$வேயம் ஶரணம் ஹி வ:'' என்றும், ''தா$_3$ஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ து$_3$ர்ப$_3$லா'' என்றும், ''விதே$_4$யாநாஞ்ச த$_3$ாஸீநாம் க:குப்யேத் வாநரோத்தம'' என்றும், ''கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந் நாபராத்$_4$யதி'' என்றும் சொல்லுகிறபடியே புருஷகாரிகளானவர்கள் விஷயத்திலும்

http://acharya.org

புருஷகாரபரையாய், ''ஸ்ரீர்தே$_3$வீ பயஸஸ்தஸ்மாது$_3$த்தி$_2$தா'' என்றும், ''செழுங்கடலமுதினில் பிறந்தவவள்'' என்றும் சொல்லுகிறபடியே விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதான பெரியபிராட்டியார் அநபாயிநியாய் இருக்கச்செய்தேயும், அபாயாதிஶங்கையாலே 'இறையும் அகலகில்லேன்' என்று மார்பிலேயிருந்து மடலெடுக்கும்படியான வடிவையுடையனாய், உலகமுண்ட பெருவாயா இத்யாதி$_3$ப் படியே ப்ரளயாபி$_4$பூ$_4$தையான பூ$_4$மியை ரக்ஷித்திருக்கச்செய்தேயும், ரக்ஷணத்தில் அபி$_4$வ்ருத்$_3$த$_4$மான அபி$_4$நிவேஶத்தையும், ரக்ஷணாநுகு$_3$ணமான கு$_3$ணக$_3$ணத்தையும், ரக்ஷகத்வ ப்ரகாஶகமான விக்$_3$ரஹத்தையும் உடையனாய் ஸௌகுமார்யாதி$_3$ கல்யாணகு$_3$ண விஶிஷ்டனாய் ஸம்ஶ்ரித ஸத்தா தா$_4$ரகனாய், உலகுக்குத்திலதமான திருவேங்கடமாமலையிலே ''வடமாமலைஉச்சி'' என்னும்படி அதன் உச்சியிலே பச்சை மாமலைபோலே நிற்கிற நச்சுமாமருந்தான அச்சுதனை அநுப$_4$வித்து நிரப$_4$யமான உபாயத்தை ப்ரார்த்தி$_2$த்தருளின தேவரீர் இப்போது திருவத்$_4$யயனோத்ஸவாங்க$_3$மாக தி$_3$வ்ய ஸ்ரக$_3$ம்ப$_3$ர பரிஷ்கரணாங்க$_3$ராகா$_3$தி$_3$களாலே அழகிய திருமேனியை அலங்கரித்துக்கொண்டு நல்லார் நவில் குருகூரிலே, எல்லாருடைய பொல்லாங்குகளையும் போக்கி, பயனன்றாகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணிகொள்வதாகப் புறப்பட்டருளி அதிவிலாஸத்துடனே உலாவியருளி, மீண்டு எழுந்தருளி, ஸாம்ஸாரிக ஸகல தாபங்களையும் மாய்க்குமதான வாய்க்கும் தண்பொருநலிலே தெளிந்தெழுந்த நீரிலே திருமஞ்ஜநம் செய்தருள்வதாக மஞ்ஜந வேதி$_3$காமத்$_4$யத்திலே ஜ்ஞாநமுத்$_3$ரா ஸஹிதராய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிற இருப்பு இங்ஙனே இரா நின்றது, எங்ஙனேயென்னில்– 'த்$_3$வயேந மந்த்ரரத்நேந' என்கிறபடியே தந்த்ரஸித்$_3$த$_4$மான மந்த்ரரத்நத்தில் பூர்வவாக்ய ப்ரக்ரியையாலே 'அகலகில்லேன்' என்று தொடங்கி 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்று ஸாபராத$_4$ சேதநருடைய ஸர்வாபராத$_4$ங்களையும் ஸர்வேஶ்வரனை ஸஹிப்பித்து, ஸமாஶ்ரயிப்பிக்கும் புருஷகார நித்யயோக$_3$த்தையும் ஸமாஶ்ரயண ஸௌகர்யாபாதகங்களான ஸௌலப்$_4$யாதி$_3$ ஸத்கு$_3$ண ஸாஹித்யத்தையும் அருளிச்செய்து ஆஶ்ரயணத்துக்கு ஆகாங்க்ஷிதங்களான ஆகிஞ்சந்ய அநந்யக$_3$தித்வங்களையும் ஆவிஷ்கரித்து ஆஶ்ரயணத்துக்கடைத்த விஷயமான அவன் துயரறு சுடரடிக்கீழே அமர்ந்து புகுந்து, இப்படி ப$_4$க்த்யுபாயத்திலே ஶக்தி ஹீநர்க்கும், முக்த்யுபாயமாய் விதி$_4$க்கப்பட்ட ஸ்வஸித்$_3$தோ$_4$பாயநிஷ்டை$_2$யை உக்த்யநுஷ்டா$_2$நங்களாலே வ்யக்தமாக்கி யருளியிருக்கச்செய்தேயும் அநாதி$_3$ பாபவாஸநா தூ$_3$ஷிதஅஶேஷ சேமுஷீகராகையாலே இவ்வர்த்த$_2$த்தில் மஹாவிஶ்வாஸ ப$_4$ஞ்ஜகமான ஶங்காவகாஶலேஶங்களையுடைய ஸமஸ்த சேதநருடையவும் ஸம்ரக்ஷண விஷயமான தேவருடைய ஸௌஹார்த்தாதி$_3$ஶயத்தாலே, ''ஸக்ருதே$_3$வ ஹி ஶாஸ்த்ரார்த்த$_2$: க்ருதோऽயம் தா$_4$ரயேந்நரம்'' என்கிறபடியே ஸக்ருத் கரணீயமாயிருக்கச் செய்தேயும் போ$_4$க்$_3$யதாதிஶயத்தாலே அஸக்ருதா$_3$வ்ருத்திக்கு யோக்$_3$யதை உண்டாய் இருக்கையாலே திருவேங்கடமாமலையிலே சென்று சேர்ந்து

http://acharya.org

திருக்குருகூரதனுள் பரனடிக்கீழே மீளவும் அமர்ந்து ஶரணம் புகுவதாகக் கோலி தத3ர்த்த2மாகத் திருமஞ்ஜநம் செய்ய எழுந்தருளியிருக்கிருப்போலே யிராநின்றது.

**ஏழாம்திருநாள் கவி**

क्षीराब्धे रङ्गनाम्ना सह विधिसदनं श्रीविमानेन गत्वा
रूपेण स्वेन सार्धं सुचिरमथ भुवीक्ष्वाकुपुर्यामुषित्वा ।
मध्येकावेरि सुप्तं फणिनि तत इह त्वत्कृते रङ्गराजं
मत्वा गातुं शठारेऽभिषव विधिमुखैस् त्वामिवालङ्करोषि ।।

க்ஷீராப்தே4 ரங்க3நாம்நா ஸஹ விதி4ஸத3நம் ஶ்ரீவிமாநேந க3த்வா
ரூபேண ஸ்வேந ஸார்த4ம் ஸுசிரமத2 பு4வீக்ஷ்வாகுபுர்யாமுஷித்வா।
மத்4யேகாவேரி ஸுப்தம் ப2ணிநி தத இஹ த்வத்க்ருதே ரங்க3ராஜம்
மத்வா கா3தும் ஶட2ாரேऽபி4ஷவ விதி4முகை2ஸ் த்வாமிவாலங்கரோஷி॥

நாயிந்தே ''ப4க்திப்ரப4ாவ ப4வத3த்3பு4த ப4ாவப3ந்த4 ஸந்து4க்ஷித ப்ரணய ஸாரரஸௌக4 பூர்ண:।'' என்றும், ''ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன்'' என்றும் சொல்லுகிறபடியே, க்ருஷ்ண த்ருஷ்ணு தத்த்வகல்பராய், த்ரைவித்3யவ்ருத்3த4 ஜநத்துக்கும், ஸாத்த்விகஜநத்துக்கும் அஶரண்யஜநத்துக்கும் ஶிரோபூ4ஷண ஸம்பத் ஶரண்யமாய் மாதாபித்ரு ப்ரப்4ருதி ஸர்வவித4ப3ந்து4வுமான சரணநளிநயுக3ளத்தை உடையரான தேவர் இப்போது திருநக்ஷத்ரோத்ஸவ தீ3க்ஷிதராய், கரஸரஸிஜத்4ருத கௌதுகராய் நிரவதி4க ஸௌந்தர்யாதி3 கல்யாணகு3ணகணநிதி4யான தி3வ்யமங்க3ள விக்3ரஹத்தை ஸகல மநுஜ நயந விஷயமாக்கிக்கொண்டு புறப்பட்டுலாவியருளி மீண்டெழுந்தருளித் திருமஞ்ஜநம் செய்தருளுவதாக மஞ்ஜநவேதி3காமத்4யத்திலே ஜ்ஞாநமுத்3ரா ஸஹிதராய்க் கொண்டு எழுந்தருளியிருக்கிற இருப்பு இங்ஙனே இரா நின்றது. எங்ஙனேயென்னில்– ''வைகுண்டே2 து பரே லோகே'' என்கிறபடியே பரமபத3மான ஶ்ரீவைகுண்ட2த்திலே ஶுத்3த4ஸத்த்வமயமாய், ஸ்வயம்ப்ரகாஶமாய், நிரவதி4க தேஜோமயமான தி3வ்யமங்க3ள விக்3ரஹத்தோடே நித்யமுக்தர்க்கு பே4ாக்3யனுய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிறவிது பத்3த4சேதநஜாதத்துக்கு தே3ஶவிப்ரக்ருஷ்டமாகையாலே பு4க்தபே4ாக3த்தில் நெஞ்சு செல்லாமல் என் செய்வோம் என்று ஊஹித்துக்கொண்டு வ்யூஹித்து, ''அடையும் வைகுந்தமும் பாற்கடலும்'' என்கிறபடியே படுக்கைப்பற்றுன திருப்பாற்கடலிலே எடுத்துவிட்டு, ''பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்'' என்று நித3ாநஜ்ஞர் ஈடுபடும்படி ப4வாப்3தி4 மக்3நரான ஸம்ஸாரிகளை உத்தரிப்பிக் கைக்காக, மஹாப்3தி4மத்4யே பள்ளிகொண்டருளின இதுவும், அதிஶயித ப4ாக3தே4ய ரான விதி4ஶிவ ஸநகாதி3களுக்கு லபி4க்குமதாய்,

மண்ணில்பிறந்து மண்ணுகும் மானிடர்க்குக் கண்ணுக்கு விஷயமாகப் பெருமையாலே அந்த ஜலஶயநத்தைவிட்டு ஸ்த$_2$லஶயநத்தை விரும்பி, 'பாலில் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்' என்கிறபடியே யாவரும் வந்தடிவணங்க அரங்கநகர் துயிலுவதாகக் கோலி எழுந்தருளியிருக்கிறவளவில், சதுர்முக$_2$ தப:ப$_2$ல நிர்வஹணார்த்த$_2$மாக ஸ்ரீரங்க$_3$விமாநத்தோடே, ஸ்வாஸாத$_4$ாரண தி$_3$வ்யமங்க$_3$ள விக்$_3$ரஹவிஶிஷ்டனுய்க்கொண்டு ப்$_3$ரஹ்மலோகத்திலே எழுந்தருளின பின்பு இக்ஷ்வாகுவினுடைய தபோவ்யாஜத்தாலே, அங்கணெடு மதிள்புடைசூழ் அயோத்தி என்னும் அணிநகரத்திலே எழுந்தருளியிருந்து இக்ஷ்வாகு ப்ரப்$_4$ருதி த$_3$ஶரத$_2$ பர்யந்தமான ராஜாக்களாலும், தயரதர்க்குமகனை தம்மாலும் அர்ச்சிதராய், ராமாவதார சரமத்தில், ''ஸ்ரீமத்$_3$ரங்க$_3$ம் மஹத்$_3$த$_4$ாம ஸத்த்வஜம் ஸபரிச்ச$_2$த$_3$ம்। ப்ரத$_3$த்தம் ராக்ஷஸேந்த்$_3$ராய ப்ரியாய ப்ரியகாரிணே॥'' என்கிறபடியே செல்வவிபீடணற்கு வேருக நல்லானைகையாலே மின்னிலங்கு பூண் விபீடணநம்பிக்கு, கோயிலாழ்வாரோடே தம்மையுபகரித்தருள, அவரும் தம்முடைய படைவீடான லங்கையை நோக்கி எழுந்தருள்வித்துக்கொண்டு போகாநிற்க, கங்கையிற் புனிதமாய காவிரி நடுவில் ஸ்ரீசந்த்$_3$ரபுஷ்கரிணீ தீரப்ரதே$_3$ஶமான புளிநத்திலே எழுந்தருளுவித்த அநந்தரம், அவராலும் எழுந்தருளுவிக்கவொண்ணுதபடி அவ்விடத்திலே திருவுள்ளம் வேர்பற்றி, மன்னுடைய விபீடணனை அநுஸரி(க்$_3$ரஹி?)த்து மதிளிலங்கையேறப் போகவிட்டு, அரவரசப்பெருஞ்சோதி அநந்தன் என்னும் அணிவிளங்குமுயர் வெள்ளையணையை மேவி பரத்வம் போலே ஆஶ்ரயிப்பார்க்கு அந்தரப்பட்டிருத்தல், வ்யூஹம் போலே கடல்கொண்டு கிடத்தல், விப$_4$வம் போலே தாத்காலிகமாயிருத்தல், அந்தர்யாமித்வம் போலே அப்ரத்யக்ஷமாதல் செய்கையன்றிக்கே, 'வடிவுடை வானோர் தலைவனே', 'கடலிடம் கொண்ட கடல்வண்ணு, காகுத்தா கட்கிலீ என்னும்படி பரத்வாதி$_3$களில் உள்ள பரத்வஸௌலப்$_4$யாதி$_3$களை ப்ரகாஶிப்பித்துக்கொண்டு அன்போடு தென்திசை நோக்கி பக்கம்நோக்கியறியாதே தேவரை கடாக்ஷித்துக் கொண்டு பள்ளிகொண்டருள்கிற முகில்வண்ணரான பெரியபெருமாளை, அடியை அடைந்து அருள்சூடியுய்ந்து சொல்மாலைஆயிரமும் அருளிச்செய்தருளின தேவரீர் இப்போது கங்குலும் பகலும் பாடியருள்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப$_4$ர்த்ருபே$_4$க$_3$ார்த்த$_2$மாக குளித்தொப்பித்துச் செல்லும் ப$_4$ார்யைப்போலே 'என் திருமகள் சேர்' என்கிறபடியே விஶ்வபதியான அழகியமணவாளர்க்குத் திரு என்னும் படி லக்ஷ்மீ ஸத்ருஶராகை யாலே அலங்க்ருத ஸர்வக$_3$ாத்ரராய்ச் செல்லவேணும் என்று தத$_3$ர்த்த$_2$மாகத் திருமஞ்ஜநம் செய்ய எழுந்தருளியிருக்கிற இருப்பென்று விண்ணப்பம் செய்யலாயிரா நின்றது.

**எட்டாம் நாள் கவி**

परावरेशाङ्घ्रिसरोजसेवा परातिरागादितरान् विहाय।

पुरेप्सितामद्य तदङ्घ्रिवृत्तिं चरन् शठारे! तनुषेऽभिषेकम् ।।

http://acharya.org

பராவரேஶாங்க்$_4$ரி ஸரோஜஸேவா பராதிராக$_3$ாதி$_3$தராந் விஹாய।
புரேப்ஸிதாமத்$_3$ய தத$_3$ங்க்$_4$ரிவ்ருத்திம் சரந் ஶடாரே! தநுஷேऽபி$_4$ஷேகம்॥

நாயிந்தே! ‘தேவிமாராவார் திருமகள் பூமி’ என்கிறபடியே ‘உடனமர்காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர்மடமகள்’ என்கிற தேவிமார் மூவரையும் உடையனாய் ‘மற்றமரர் ஆட்செய்வார்’ என்கிறபடியே ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்தருள்கிற சேர்த்திக்கும் போற்றி என்றுட்செய்கிற அயர்வறுமமரர்களதிபதியாய், ‘மேவியஉலகம் மூன்றவையாட்சி’ என்கிறபடியே அந்த நித்யஸூரிகளோபாதி ப்ரகாரதயா ஸேவ்யமான ஆகாரத்தாலே தனக்குத் தகுதியாயிருக்கிற லோகத்ரயத்துக்கும் ஏகநாயகனாய், ‘வேண்டுவேண்டுருவம் நின்னுருவம்’ என்கிறபடியே ஆஶ்ரிதாதீ$_4$ந மான ஸ்நாந, ஆஸந, ஶயனாதி$_3$களை உடையனான ஸர்வேஶ்வரனுடைய ஸௌஹார்த்த$_3$ விஶேஷத்தாலே ஸஹஜஸார்வஜ்ஞ்யாதி$_3$ ஸத்$_3$கு$_3$ணஸமேதராய் ‘‘என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசன்’’ என்கிறபடியே திறத்துக்கே துப்புரவாம் திருமாலான அவன் தேவரைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்த சீரை இறைப்பொழுதில் காலம் பருகி இருக்கச்செய்தேயும் அதில் ஆராமையாலே ‘‘இன்கவிபாடும் பரமகவிகளால் தன் கவி தான் தன்னைப்பாடுவியாது’’ என்கிறபடியே வ்யாஸ, பராஶர, வால்மீகி, ஶுக,ஸௌநகாதி$_3$களும், முதலாழ்வார்களுமாகிற பாலேய்தமிழரும், பத்தருமான பரமகவிகளாலே பாடுவியாதே தேவரை ஆம் முதல்வன் இவனென்று நாமுதல் வந்து புகுந்து தூமுதல் பத்தரான தொண்டர்க்கமுதுண்ணச் சொல் மாலைகளை வாய் முதலப்பனாய் தப்புதலறச் சொன்ன உதவிக்கைம்மாறு, என்னுயிரென்ன உற்றெண்ணில்

‘‘இயம் ஸீதா மம ஸுதா ஸஹத$_4$ர்மசரீ தவ।
ப்ரதீச்ச$_2$ சைநாம் ப$_4$த்$_3$ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா॥

என்கிறபடியே வேந்தர்தலைவனான சனகராசன் ஏந்துபெருமை இராமனுக்கு காந்தள் முகிழ்விரல் சீதையைக் கடுஞ்சிலை சென்றிறுக்க உதவிக்கைம்மாறாகக் கைபிடித்தாப்போலே தாள்களை எனக்கே தலைத்தலைச்சிறப்பத்தந்த பேருதவிக்கைம்மாறாத்தோள்களை ஆரத்தழுவி என்னுயிரை அறவிலைசெய்தனன் என்கிறபடியே உபகார ஸ்ம்ருதி கொண்டும், மார்பும் தோளுமாகப் பணைக்கையாலே ஆரத்தழுவி அறவிலைசெய்த ஆத்மஸ்வரூபத்தினுடைய அத்யந்த பே$_4$க்$_3$யதையையும் அநந்யார்ஹஶேஷத்வத்தையும், அதனுடைய பராகாஷ்டை$_2$யான ததீ$_3$யபாரதந்த்ர்ய பரமபுருஷார்த்த$_2$த்தையும் அவனே ப்ரகாஶிக்கப்பெற்றுடையீர் ஆகையாலே வியன்மூவுலகுபெறினும் போய்த்தானேதானேயானாலும் சுழிபட்டோடும் சுடர்ச்சோதிவெள்ளத்து இன்புற்றிருந்தாலும், அவனடியாரான சிறுமாமனிசரடியே கூடுமிதுவல்லால் பாவியேனுக்குறுமோ என்று அதி$_4$கரித்ததான அந்த புருஷார்த்த$_2$த்தில் ஆத$_3$ராதிஶயத்தையும், வ்யதிரிக்தமான விஷயங்களில் வைத்ருஷ்ண்யத்தையும் விஶதமாக்கியருளின தேவர்

http://acharya.org

இப்போது திருவத்$_4$யயநவ்யாஜத்தாலே வரையார் மாடமன்னு குருகூரில் திருவீதி$_2$கள் தோறும் சிறப்புடனே புறப்பட்டுலாவியருளி மீண்டெழுந்தருளித் திருமஞ்ஜநம் செய்தருள்வதாக எழுந்தருளியிருக்கிறயிருப்பு இங்ஙனேயிரா நின்றது எங்ஙனே யென்னில்; இருமாநிலம்முன்னுண்டுமிழ்ந்த செங்கோலத்த பவளவாய்ச் செந்தாமரைக்கண் என்னம்மான் பொங்கேழ்புகழ்கள் வாயவாய்ப்புலன் கொள் வடிவென் மனத்ததாய் அங்கேய் மலர்கள் கையவாய் வழிபட்டோட அருளில் இங்கே திரிந்தேற்கு இழுக்குற்றென் என்று ஆபத்ஸக$_2$னனவன் திருவடிகளில் அகி$_2$ல கரணங்களாலு முண்டான நிகி$_2$ல கைங்கர்யங்களுமே அந்த ப$_4$ாக$_3$வதர்களுக்கு உகப்பாகையாலே பரந்ததெய்வமும் பல்லுலகும் அன்று உடனே விழுங்கி கரந்துமிழ்ந்த திருக்குருகூரதனுள் பரன் திறத்திலே அந்தக் கைங்கர்யத்தைச் சிந்தையாலும், சொல்லாலும், செய்கையினுலும் செய்தருளத் திருவுள்ளம்பற்றி தத$_3$ர்த்த$_2$மாகத் திருமஞ்ஜநம் செய்ய எழுந்தருளியிருக்கிற இருப்பென்று விண்ணப்பம் செய்யலாயிராநின்றது.

**ஒன்பதாம்நாள் கவி**

न्यसनभजज पादावाप्ति वाङ्मात्रगान प्रणिपतनकराणां मुक्तिरुक्ताऽपि तस्याम् ।
अभिरुचिरहितानां कृष्णवच्छक्तियोग्यं शठमथन! जनानां स्नासि सर्वाघशान्त्यै ।

ந்யஸந ப$_4$ஜந பாத$_3$ாவாப்திவாங் மாத்ரகாந
ப்ரணிபதகராணும் முக்திருக்தாऽபி தஸ்யாம்।
அபி$_4$ருசிரஹிதாநாம் க்ருஷ்ணவச்ச$_2$க்தியோக்$_3$யம்
சட$_2$மதந! ஜநாநாம் ஸ்நாஸி ஸர்வாக$_4$ஶாந்த்யை॥

நாயிந்தே! ''கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும் கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்று யாதுமில்லை'' இத்யாதி$_3$களாலே நல்ல புதல்வர், மனையாள் நவையில் கிளை, இல்லம், மாடு இவையனைத்தும் அல்லலென்று ஔபாதி$_4$க ப$_3$ந்து$_4$க்களுடைய அப$_3$ந்து$_4$த்வாதி$_3$களையும், ''எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும் உண்டபிரான் தொண்டரோமாய் உய்யலல்லாலில்லை கண்டீர் துணை'' இத்யாதி$_3$களாலே ''சேலேய் கண்ணியரும் பெரும்செல்வமும் நன் மக்களும் மேலாத்தாய்தந்தையும் அவரே'' என்று ஸர்வேஶ்வரனுடைய நிருபாதி$_4$க ப$_3$ந்து$_4$த்வாதி$_3$களையும் உபதே$_3$ஶித்தருளி, இப்படி அஸேவ்யஸேவாதி$_3$களான அப்ராப்தவிஷயப்ராவண்யம் கழிகையாலே அநந்தஶாக$_2$மாக நிரந்தராபி$_4$வ்ருத்$_3$த$_4$ மான அபி$_4$நிவேஶாதி$_3$ஶயத்தையுடையீராய் ''ஆகம்சேர் நரசிங்கமதாகி'' என்கிறபடியே விருத்$_3$த$_4$மான நரத்வ ஹரித்வங்களைப் பொருத்தின திருத்தத்தாலே அரி பொங்கிக்காட்டுமழகு என்று சீரிய சிங்கமதான வடிவைக்கண்டபோதே ப$_4$யாக்$_3$நி

கொழுந்திலே தும்பிப்பதஞ்செய்த வாளவுணனுடைய உடலை வாடின கோரைகீறினுப் போலே வளர்ந்த வாளுகிராலே அளைந்த கோளரியான அவுணனுள்ளம் பொருந்தி யுறைகிற விளங்கும் சுடர்ச்சோதி உயரத்தொருத்தா என்றேயதுவது என்று ஒருபடிப்படத்திருவுள்ளம்பற்றி நாளேலறியேன் எனக்குள்ளனவென்று நித்யகைங்கர்யத்தைக் கழித்து, வைத்தநாள்வரை எத்தனை என்கிற ப்ரஶ்நத்திற்கு உத்தரம் த$_3$த்தமாவதற்கு முன்னே ஶைதி$_2$ல்யம் பிறந்து மல்லிகை கமழ் தென்றலும் மாலைப்பூசலுமாய் மயங்குகையாலே மரணமானுல் வைகுந்தம் கொடுக்கும் பிரான் என்கிறபடியே சரண, சரணவரண ப$_2$லஸித்$_3$தி$_4$யைத் திருக்கண்ணபுரத்தரணியாளன் கருணையாலே மரணவதி$_4$யாக்கித் தந்தருளப்பெற்றுடையீரான தேவரிப்போது திருவத்$_4$யயநோத்ஸவ வ்யாஜத்தாலே புறப்பட்டுலாவியருளி மீண்டெழுந்தருளி மஞ்ஜநவேதி$_3$கா மத்$_4$யத்திலே ஜ்ஞாநமுத்$_3$ரா ஸஹிதராய்க்கொண்டு எழுந்தருளி யிருக்கிறயிருப்பு இங்ஙனே யிராநின்றது எங்ஙனேயென்னில்; ''காலை மாலை கமல மலரிட்டு மாலை நண்ணித் தொழுதெழுமின்'' என்று அர்ச்சநாத்$_3$யங்க$_3$யுக்தமான ப$_4$க்தியையும் அதிலஶக்தர்க்கு ''தனதாளடைந்தார்க்கெல்லாம் சரணமாகும்''என்று ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தி ரூபையான ப்ரபத்தியையும், அதிலஶக்தர்க்கு ''திருக்கண்ணபுரம் சொல்ல நாளும் துயர் பாடுசாராவே'' என்று அர்ச்சாஸ்த$_2$லத்தினு டைய உச்சாரண மாத்ரத்தையும், ''பாடலான தமிழாயிரத்துள் இப்பத்தும் பாடியாடிப் பணிமின்'' என்று பூர்வோக்த ஸர்வோபாயங்களிலும் அந்வயஶூந்யரானவர்களுக்கு ந்ருத்தப்ரணுமயுக்தமான இப்பத்துப்பாட்டினுடைய கீர்த்தநத்தையும் து$_3$ர்ஜநபீடி$_3$தரான அர்ஜுநாதி$_3$களுக்கு தூ$_3$தனுய் கீ$_3$தாசார்யனைப்போலே அதி$_4$காராநுகு$_3$ணமாக நெறியெல்லாம் எடுத்துரைத்திருக்கச் செய்தேயும் அதில் ஆசையின்றிக்கே ஈசிபோமின் என்பாரளவில் நாசமான பாசத்தாலே நலிவுபடுகிற நீசரான அடியோங்களுடைய ப்$_3$ரபல பாபநிப$_3$ந்த$_4$நமான ஸகலதாபங்களையும் போக்கி விமலராக்குகைக்காக எழுந்தருளியிருக்கிற இருப்பென்று விண்ணப்பம் செய்யலாயிராநின்றது.

**பத்தாம்நாள் கவி**

पर्यायेण समेधिता भगवता भक्तिः परायाऽपरं
ज्ञानं ते परमा च भक्तिरिति या तत्प्राप्तिरूपा दशा ।
तच्छङ्कां शठकोप! संशमयितुं सप्रत्ययं प्राणिनां
संस्नातः क्रियया दशां विशदयन् तां तामिवाभासि भोः ।।

பர்யாயேண ஸமேதி$_4$தா ப$_4$க$_3$வதா ப$_4$க்தி: பராயா: பரம்
ஜ்ஞாநம் தே பரமா ச ப$_4$க்திரிதி யா தத்ப்ராப்திரூபா த$_3$ஶா।
தச்ச$_2$ங்காம் ஶட$_2$கோப! ஸம்ஶமயிதும் ஸப்ரத்யயம் ப்ராணிநாம்
ஸம்ஸ்நாத: க்ரியயா த$_3$ஶாம் விஶத$_3$யந் தாம் தாமிவாப$_4$ாஸி பே$_4$ா:॥

http://acharya.org

நாயந்தே! த்ரைவித்$_3$யவ்ருத்$_3$த$_4$ஜநஶிரோபூ$_4$ஷணமாய், ஸாத்த்விகஜநஸநாதந ஸம்பத்தாய், ஆஶ்ரிதஸர்வவித$_4$ப$_3$ந்து$_4$ரூப(பூத)முமாய், அஶரண்யஶரண்யமுமா யிருக்கையாலே மன்னுயிர்கட்கெல்லாம் அரணமான சரண பங்கஜங்களும், நளிந நாளலலிதங்களாகையாலே அவற்றைப்போலான இணைக்காலான கணைக்கால்களும், யௌவந ப்ரஹர்ஷ ப்ரருதோத்போதம் (?) போலே உத்ப$_4$ாநுக்களான ஜாநுக்களும், கரிப்ரவரகரங்கள் போலே உருக்களான ஊருக்களும், கநகாசலதட போலே யிருக்கிற கடிகாந்தி லோகாந்தையான படீகாந்தியும், வடபத்ரபுடம் போலே ஸுந்த$_3$ரமான துந்தி$_3$ஸ்த$_2$லமும், ஸௌந்த$_3$ர்ய ஸரித$_3$ாவர்த்த க$_3$ர்தாப$_4$மாய், அதிக$_3$ம்பீ$_4$ரமான நாபீ$_4$ஸரஸ்ஸும், நிரந்தர சஞ்சலபு$_3$த்$_3$தி$_4$ ஜநகமான மத்$_4$யதே$_3$ஶமும், அவிரளதரள விராஜிதமாய் அமுகுள வகுளாலங்க்ருதமாய் அதிதராஹாரபூ$_4$ஷிதமாகையாலே அநவரததாஹிஸ்தமான (?) வக்ஷஸ்த$_2$லமும், அவஞ்சகரான அகிஞ்சநர்க்கு ஸ்வஸ்தித$_3$ா யியான ஹஸ்தபத்$_3$மமும், அர்க்கஸமாநதர்க்கஜாலத்தினுடைய மாநஹாரியான ஜ்ஞாநமுத்$_3$ரையும், ஸம்ஸாரபே$_4$ாகி$_3$ ஸந்த$_3$ஷ்ட ஜீவஜீவாதுவான க்$_3$ரீவா ப்ரதே$_3$ஶமும், அகவாயில் அநுராக$_3$த்துக்கு வாய்த்தலைப்போலேயாய் முகிழ்விரிகிற பங்கயமனைய செங்கனிவாயும், திருமுத்துநிரையும், மகரம் தழைக்கும் தளிரோ வென்கிற வர்ண நிர்ணயகமான கர்ணபாஶமும், சித்தம் சிறைகொள்ளுமதான முத்தின் குழையும், 'கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ' என்கிற உபமாந ஸம்ஶயத்துக்கு உதாஸிகையான நாஸிகையும், கரணாந்தரப்ரத்யபேக்ஷையாலே ஶ்ரவணகுதூஹலங்களாய் ப்ரவணரக்ஷண தீ$_3$க்ஷிதங்களான ஈக்ஷணங்களும், நயநபங்கஜங்களை வளைந்துபடிகிற மது$_4$கரநிகரங்கள் போலே, கருத்தை வருத்துமதான திருப்புருவங்களும், நாள் மன்னுவெண்திங்கள் போலே கோள்மன்னி ஆவியடுகிற திருநுதலும், ''ருக்ணே தோகே ஸர்வஜநநீ தத்கஷாயம் பிப$_3$ந்தீ'' என்கிறபடியே கருநாடு காடெழச் சாத்தின திருநாமமும், ஸம்ஸாரது$_3$:க$_2$ார்க தாபநாஶகரமான வாசத்தடமென்று பேசத்தகுதியான திருமுக$_2$மண்ட$_3$லமும், வக்த்ரமாகிற சித்ரப$_3$ாநுவுக்கு பரப$_4$ாக$_3$மாய், அதிகாளிகையான அளகாளிகையும், ஶேஷித்வத்துக் குத் தலையான தண்டுழாய் பொன்முடிபோலே, ஶேஷத்வத்துக்கடியான மணிமுடியும் – ஆக இப்படி ஆராகிலும் நீராய் அலைந்துகரையும்படி ப்ராவண்ய ஜநகமான லாவண்யராஶி ஒரு வடிவுகொண்டாப்போலேயிருக்கிற தேவரிப்போது திருவத்$_4$யயனோத்ஸவ வ்யாஜத்தாலே குன்றம்போல் மணிமாடநீடு திருக்குருகூரத னுள் நின்றவாதிப்பிரான் உலாவியருளின நெடுவீதிகள்தோறும் ''யேந யேந த$_4$ாதா க$_3$ச்ச$_2$தி தேந தேந ஸஹ க$_3$ச்சதி'' என்கிறபடியே உலாவியருளி, மீண்டெழுந்தருளிப் பொருநல் சங்கணித்துறையில் துகில்வண்ணத்தூநீராலே திருமஞ்ஜநம் ஆடியருளி ஸ்நாநாஸநத்திலே நாநாவித$_4$ க$_3$ந்த$_4$புஷ்பாதி$_3$களாலே அலங்க்ருதராய் எழுந்தருளியிருக்கிற இருப்பு இங்ஙனே யிராநின்றது; எங்ஙனேயென்னில் –

ஜ்ஞாநாதி$_3$ கல்யாணகு$_3$ணக$_3$ணபூ$_4$ஷிதரான ஸர்வேஶ்வரன் நித$_3$ாநஜ்ஞர்

ஈடுபடும்படி ஆமத்தையறுத்துப்பசியை மிகுத்துச் சோறிடுவாரைப்போலே ''மயர்வற மதிநலமருளினன்'' என்கிறபடியே அஜ்ஞாநத்தை ஸவாஸநமாகப் போக்கி ப$_4$க்தி ரூபாபந்நஜ்ஞாநத்தைத் தந்தருளி 'பேரமர் காதல் கடல்புரைய விளைவித்து', 'காதல் கடலில் மிகப்பெரிதால்', 'காதலுரைக்கில் தோழீ மண்டிணிஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்பும் கழியப்பெரிதால்', 'அதனில் பெரிய என்அவா' என்கிறபடியே தத்த்வத்ரயத்தையும் விளாக்குலை கொள்ளும்படி பரப$_4$க்தி, பரஜ்ஞாந, பரமப$_4$க்தி ரூபேண அந்த ப$_4$க்தியையும் அபி$_4$வ்ருத்$_3$தை$_4$யாக்கி 'என்னவாவறச் சூழ்ந்தாயே' என்னும்படி, கடல்போன்ற ஆத$_3$ரத்தோடே சூழ்ந்து, தாபங்களை ஹரித்து 'அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்' என்னும்படி ஸ்வசரணகமலப்ராப்திபர்யந்தமான பர்வக்ரமேண விளைத்த ஸர்வாவஸ்தை$_2$களையும் 'கையபொன்னாழி வெண்சங்கொடும் காண்பான் அவாவுவன் நான்' 'கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான் காண்பன்' அந்தமில் பேரின்பத்தடியாரோடிருந்த அளவில் முடிந்த அவாவிலந்தாதியிப்பத்து என்று தேவர் தெருள் கொள்ள அருளியிருக்கச்செய்தேயும் அநாதி$_3$ பாபவாஸநா தூ$_3$ஷித அஶேஷ - சேமுஷீகராகையாலே இவ்வர்த்த$_2$ விஷயமாக ஸந்தே$_3$ஹித்திருக்கிற மந்த$_3$மதிகளுடைய ஶங்காவகாஶலேஶங்களை ஸப்ரத்யயமாக அவ்வோத$_3$ஶைகளில் அநுஷ்ட$_2$ாநத்தாலே விஶத$_3$மாக்காநின்றுகொண்டு ஶமிப்பித்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றி தத$_3$ர்த்த$_2$மாகத் திருமஞ்ஜநம் செய்ய எழுந்தருளியிருக்கிறுப்போலேயிரா நின்றது.

### வீடுவிடைத் திருமஞ்சநக்கவி

मेशं केशादिदेवाविदितनिजपदं व्यूढम् आद्यामरेन्द्रं
स्वेशं स्वाशातिरेकप्रवहितवचनाभिष्टुतं त्वद्य कृत्वा।
गीतं गीत्वाऽथ गोदाकृतमिह तमलं तर्पयित्वा च लब्ध्वा
गेहं तस्मात् कृतार्थस्त्वमिह शठरिपो! स्नासि नः श्रान्तिशान्त्यै ।।

மேஶம் கேஶாதி$_3$தே$_3$வாவிதி$_3$தநிஜபத$_3$ம் வ்யூட$_4$ம் ஆத்$_3$யாமரேந்த்$_3$ரம்
ஸ்வேஶம் ஸ்வாஶாதிரேக ப்ரவஹித வசநாபி$_4$ஷ்டுதம் த்வத்$_3$ய க்ருத்வா।
கீ$_3$தம் கீ$_3$த்வாऽத$_2$ கோ$_3$தா$_3$க்ருதமிஹ தமலம் தர்ப்பயித்வா ச லப்$_3$த்$_4$வா
கே$_3$ஹம் தஸ்மாத் க்ருதார்த்த$_2$ஸ்த்வமிஹ ஶட$_2$ரிபோ ஸ்நாஸி ந:
ஶ்ராந்தி ஶாந்த்யை॥

நாயந்தே! நாயந்தே! ஶ்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமனாய், ஸமஸ்த கல்யாணகு$_3$ணாத்மகனாய் ஸ்ரீவைகுண்ட$_2$நிகேதநனாய், நித்யஸூரிபரிஷந்நிரந்தர ஸேவ்யமான சரணநளிநனாய்க்கொண்டு நித்யாநந்த$_3$நிர்ப$_4$ரனாகச் செல்லாநிற்கச்

http://acharya.org

செய்தே, ''ஸ ஏகாகீ ந ரமேத'' என்று உண்டதுருக்காட்டாதே அசித்$_3$விஶிஷ்டமான சேதநஸமஷ்டி பக்கல் ''அருள் புரிந்த சிந்தை அடியார் மேல் வைத்து'' என்கிறபடியே பரமகாருணிகனாய் ஸ்வசரணகமல ஸமாஶ்ரயணாநுகூலமான கரணகளேப$_3$ரங்களைக் கொடுக்கக்கோலி, ''ப்$_3$ரஹ்மாதி$_3$ஷு ப்ரலீநேஷு நஷ்டேலோகே சராசரே। ஏகஸ் திஷ்ட$_2$தி விஶ்வாத்மா ஸ து நாராயண: பர:'' என்றும், ''ஒன்றும்தேவும் உலகும்உயிரும் மற்றும் யாதுமில்லாவன்று நான்முகன் தன்னொடு தேவருலகோடு உயிர்படைத்தான்'' என்றும் சொல்லுகிறபடியே சதுர்முக$_2$ப்ரமுக$_2$ ப$_3$ஹுமுக$_2$ ஸ்ருஷ்டியைப்பண்ணி, ஸ்ருஷ்டரான சேதநர்களுக்கு நல்லதும்தீயதும் விவேகிக்கைக்கு ஶாஸ்த்ரங்களான நேத்ரங்களைக்கொடுத்திருக்கச் செய்தேயும், அஜ்ஞாநார்ணவ மக்$_4$நரான இவர்களை உத்தீர்ணராக்குகைக்கு ''மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்து'' என்கிறபடியே ராமக்ருஷ்ணாதி$_3$ரூபேண அவதரித்தருளியும், இப்படிப்பண்ணின அவதாரங்கள்தானும் தத்காலீநர்களுக்கே உஜ்ஜீவநமாத்ர ஶேஷமாகையாலே, தத$_3$நந்தரகாலீரான அஸ்மத$_3$ாதி$_3$ ஸகல பாமரஜந – உஜ்ஜீவநார்த்தமாக மாடமாளிகை சூழ்ந்தழகாய திருக்குருகூரிலே வீடில் சீர்ப் புகழாதிப்பிரானாய் மேவியும், மலிந்து செந்நெல் கவரிவீசும் திருக்குருகூரதனுள் பொலிந்துநின்றபிரானாய் நின்றும், நிலையழகிலே ''கண்டவாற்றால் தனதே உலகெனநின்றான்'' என்றும். ''நீயும் திருமகளும் நின்றாயால்'' என்றும் ''நிலையார நின்றான்'' என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஸ்மாத்பரனென்னும்படியை யறுதியிட்டு, ஈடுபட்டு அறிவுடையாரடங்கலும் ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கும்படி நல்லார்நவில் குருகூரிலே நித்யஸந்நிதி$_4$பண்ணியிருக்கிற குறியமாணுருவாகிய நீள்குடக்கூத்தனைப் பாடியருளுவதாக ஸங்கல்பித்து, ''ஸ்தோத்ரம் வேத$_3$மயம் கர்த்தும் தத்ர த்$_3$ராவிட ப$_4$ாஷயா। தத்ர வேத$_3$ாஸ்ஸமஸ்தாஶ்ச த்$_3$ராவிட$_3$த்வமுபாக$_3$தா:॥'' என்கிறபடியே ருக்,யஜுஸ், ஸாம, அத$_2$ர்வணங்களை திருவிருத்தம் முதலான தி$_3$வ்யப்ரப$_3$ந்த$_4$ சதுஷ்டயமாக்கி, மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்றதமிழ்மறையை அதி$_4$கரித்தார்க்கு, ''உடைந்து நோய்களை ஓடுவிக்குமே'' என்றும், ''நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்டபெண்டிர் மக்களே'' என்றும், ''மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே'' என்றும், ஐஹிக ஆமுஷ்மிக ப$_2$லப்ரத$_3$ாந ஸஹிதமாக விண்ணோர் பெருமான் தன்னை மொய்யசொல்லால் இசைமாலைகளேத்தியருளின தேவரீர் இப்போது ஸாத்த்விக ஜநஸார்த்த$_2$ங்களை க்ருதார்த்த$_2$ராம்படி தி$_3$வ்யோத்ஸவ வ்யாஜத்தாலே கோவில் நின்றும் புறப்பட்டருளி, விவித$_4$விதாந புஞ்ஜரஞ்சிதமாய் செழுமாமணிகள் சேரும் திருமாமணிமண்டபமான இத்திருவோலக்கத்திலே ஒரு நாயகரத்நம் அங்குரித்தாப்போலே மஜ்ஜநவேதி$_3$கா மத்$_4$யத்திலே ஜ்ஞாநமுத்$_3$ரா ஸஹிதராய்க் கொண்டு ஏறியருளி, பொங்கிளவாடை அரையிற்சாத்தி, திருச்செய்யமுடியும் ஆரமும் படையுமான தி$_3$வ்யாலங்காரத்துடனே அபி$_4$ஷேகஜலார்த்$_3$ர க$_3$ாத்ரராய் ஸாத்த்விகஜந நேத்ரோத்ஸவகரராய் ஆர்த்$_3$ரவஸநபூ$_4$ஷண பூ$_4$ஷிதராய் எழுந்தருளியிருக்கிறவிருப்பு

http://acharya.org

இங்ஙனே இராநின்றது, எங்ஙனேயென்னில்; மேஶம் –''மா'' என்று திருநாமமுடைய பெரியபிராட்டியாருக்கு நாயகனாய், கேஶாதி3 தே3வாவிதி3தநிஜபத3ம் – 'க' என்றும் 'ஈசன்' என்றும் சொல்லப்படுகிற ப்3ரஹ்மருத்3ரர்கள் தொடக்கமான ஸர்வதே3வதைகளாலும் அறியவரிதான ஸ்ரீவைகுண்ட2த்தை இருப்பிடமாகவுடையனாய், வ்யூட4ம் – ''வி'' என்று பக்ஷிவாசகமாகையாலே த்ரயீமயனான பெரியதிருவடியை வாஹநமாகவுடையனாய், ஆத்3யாமரேந்த்3ரம் – ''முன்னையமரர்'' என்கிறபடியே ஆத்3யரான அயர்வறுமமரர்களதிபதியாய், ஸ்வேஶம் – ''ஆத்மேஶ்வரம்'' என்கிறபடியே தனக்குத்தானே நியாமகனாய், ஆகவிப்படி ஶ்ரிய:பதித்வ, பரமபத3நிலயத்வ, க3ருட4வாஹநத்வ, ஸூரிபே4ாக்3யத்வ, நிரங்குஶ ஸ்வாதந்த்ர்யங்களோடே ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேஶ்வரனை, ஸ்வாஶாதிரேக ப்ரவஹித வசநாபி4ஷ்டுதம் த்வத்3ய க்ருத்வா – ''அவாவிலந்தாதி'' என்கிறபடியே தேவரீருடைய பக்திப்ரகர்ஷத்தாலே வழிந்து புறப்பட்ட சொற்களாலே வாயாரப் புகழ்ந்து, கீ3தம் கீ3த்வாஶத2கே3ாத3ா க்ருதமிஹதமலம் தர்ப்பயித்வா ச – அவ்வளவன்றிக்கே பெரியாழ்வாரோட்டைக் குடல்துடக்காலே தேவரீருக்குத்திருமகளாரான ஆண்டாளுடைய சங்கத்தமிழ் மாலையான திருப்பாவையைப்பாடியருளி, தேவரீருடைய தி3வ்யப்ரப3ந்த4 ஶ்ரவணத்தாலே ப்ரீதனான அவனை மிகவும் ப்ரியப்படுத்தி, லப்3த்4வா கே3ஹம் தஸ்மாத் – திருவத்4யயநோத்ஸவார்த்த2மாக பத்நீ பரிஜநாதி3களோடே தேவரீருடைய திருப்புளிக்கீழ்வீட்டிலே பத்துநாளுமெழுந்தருளியிருந்து, மேவிஉறைகோவிலிலே ஏறியருளுவதாக உத்3யோகி3த்தருளிய பொலிந்து நின்றபிரானை ராஜநீதியை அநுஸரித்துநின்று ஒருரஸத்தை விளைவிப்போமென்று பார்த்து வீடுதரவேணுமென்று அபேக்ஷித்து, ஸஶாஸநமாகப் பெற்று, க்ருதார்த்த2ஸ் த்வமிஹ ஶட2ரிபோ! – ஆகவிப்படி அத்தலைக்கும் ஸர்வப்ரகாரரஸாவஹராகையாலே க்ருதார்த்த2ரான தேவரீர் இப்போது ஸ்நாஸி ந: ஶ்ராந்தி ஶாந்த்யை – ஸ்நாந வ்யாஜத்தாலே படிகளைந்து மதகு திறந்தாப்போலே ஒருமடைகொள்ள ப்ரவஹிக்கிற தேவரீருடைய திருமேனியழகு வெள்ளத்திலே முழுக்காட்டி அடியோங்களுடைய ஸாம்ஸாரிக ஸகலதாபங்களும் ஆறுவதாக எழுந்தருளியிருக்கிருப்போலே யிராநின்றது.

**********